ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
சிவபுரம், புதுக்கோட்டை – 622 422
(NAAC 4ஆம் சுற்றுத் தரஆய்வில் $B^{++}$ தகுதி)
பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது

## தமிழ்த்துறை
## பாடத்திட்டக் குழு தீர்மானங்கள்

| கூட்ட எண் | நாள் | காலம் |
|---|---|---|
| XII | 29-04-2026 (புதன் கிழமை) | முற்பகல் 11:00 மணி |

புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறையின் பாடத்திட்டக் குழு 2026ஆம் கல்வியாண்டு முதல் இளநிலை தமிழ் இலக்கியத்தில் சேர்க்கை பெற உள்ள மாணவர்களுக்கான புதிய கலைத்திட்டத்தையும் **(R4)** பிற இளநிலை பட்டங்களின் விருப்ப மொழிப் பாடங்களான பகுதி I தமிழ் மற்றும் பகுதி I ஹிந்தி ஆகியவற்றிற்கான புதிய பாடத்திட்டங்களையும் உருவாக்க வேண்டியுள்ளது.

இதனை முன்னெடுக்கம் பொருட்டு இளநிலை தமிழ் இலக்கியம், விருப்ப மொழிப் பாடங்களான பகுதி I தமிழ் மற்றும் பகுதி I ஹிந்தி ஆகியவற்றிற்கான **12ஆவது** பாடத்திட்டக் குழு கூட்டம் **29-04-2026** (புதன் கிழமை) அன்று முற்பகல் 11:00 மணிக்கு நடைபெற்றது. அதில் முன்மொழியப்பட்ட தீர்மானங்களும் பரிந்துரைகளும் கல்விசார் குழுவின் ஒப்புதலுக்கு முன்மொழியப்படுகிறது.

### முன்மொழியப்பட்ட தீர்மானங்களும் பரிந்துரைகளும்

1. தமிழ்நாடு மாநில உயர்கல்விக் குழு (TANSCHE), தேசிய தரமதிப்பீட்டுக் குழு (NAAC) பல்கலைக்கழக மானியக் குழு (NAAC), பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலின் படியும் பல்கலைக்கழக மானியக் குழுவின் கற்றல் விளைவு அடிப்படையலான கலைத்திட்ட வரைவின் (UGC – LOCF ) பெயரிடு முறைகளைப் பின்பற்றியும் உருவாக்கப்பட்ட 2026ஆம் கல்வியாண்டிற்கான புதிய கலைத்திட்டத்தைச் (R4) செயல்படுத்திட குழு பரிந்துரை செய்கிறது.
2. புதிய கலைத்திட்டத்தையும் அதன் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களையும் அதற்கு வைக்கப்பட்டுள்ள பாடநூல்களையும் 2026ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைபடுத்திட குழு பரிந்துரை செய்கிறது.

3. கீழ்க்காணும் பாடத்திட்டங்கள் ஒழுங்கமைவையும் அதற்கான மதிப்புப் புள்ளிகளையும் குழு ஏற்றுப் பரிந்துரை செய்கிறது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Part I | 1 – 4 | OLC | பகுதி - I மொழிப்பாடம் | - | 4 | 12 | 400 |
| Part I | 1 – 4 | ELC | பகுதி – II ஆங்கிலம் | - | 4 | 12 | 400 |
| Part III | 1 – 6 | CC | முதன்மைப் பாடங்கள் | - | 15 | | |
| | 1 – 4 | AC | துணைமைப் பாடங்கள் | - | 6 | 96 | 2400 |
| | 4 & 5 | DSE | துறைசார் விருப்பப் பாடங்கள் | - | 3 | | |
| Part IV | 3 – 5 | SEC | திறனூக்க விருப்பப் பாடங்கள் | - | 3 | | |
| | 5 | Int | கல்விஇடைப் பயிற்சி | - | 1 | | |
| | 1 & 2 | GEC | துறைமாற்று விருப்பப் பாடங்கள் | - | 2 | | |
| | 3 – 6 | AECC | திறனூக்க கட்டாய பாடங்கள் (EVS, VE, DM, GS) | - | 4 | 26 | 1300 |
| | 4 & 5 | SLC | தன்முயற்சி கற்றல் பாடங்கள் | - | 2 | | |
| | 6 | VAC | மதிப்புக் கூட்டுப் பாடம் | - | 1 | | |
| Part V | 3 | HW | உடல்நலமும் மனஆரோக்கியமும் | - | 1 | 1 | 100 |
| | | Ex | புறநிலைச் செயல்பாடுகள் (மதிப்புப் புள்ளி மட்டும்) | - | -- | 1 | |
| | | | கூடுதல் | | 46 | 148 | 4600 |

4. கடந்த கலைத்திட்டத்தின் மீது பங்குதாரர்களிடம் (Stakeholders) இருந்து பெறப்பட்ட பின்னூட்டங்களின் அடிப்படையில் புதிய கலைத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களையும் குழு ஏற்றுப் பரிந்துரை செய்கிறது

5. புளூம்ஸ் வகைப்பாட்டின் அடிப்படையில் புதிய கலைத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டக் கற்றல் விளைவுகளை (Course Outcomes) ஏற்றுக் குழு பரிந்துரை செய்கிறது

6. தேசிய தரமதிப்பீட்டுக் குழுவால் (NAAC) வழங்கப்பட்ட புதிய பரிந்துரைகளை உள்ளடக்கி புதிய கலைத்திட்டத்தில் செயயப்பட்டுள்ள கீழ்க்காணும் மாற்றங்களைக் குழு பரிந்துரைக்கிறது

    i. கற்றல் நோக்கங்கள் (OBE) பட்டப்படிப்புக் கற்றல் விளைவுகள் (POs), பாடத்திட்ட கற்றல் விளைவுகள் (COs), பட்டப்படிப்புக் கற்றல் சிறப்பு விளைவுகள் (PSOs) ஆகியனவற்றோடு இசைவுபட ஒருங்கமைக்கப்பட்டுள்ளன

    ii. பொதுமை விருப்பப் பாடங்கள் (GECs) விருப்பப் பாடத் தெரிவு முறையின்படி (CBCS) நெகிழ்வுத் தன்மையுடன் அமைக்கப்பட்டுள்ளன

iii. கல்விஇடைப் பயிற்சி (Internship), திட்டக்கட்டுரை (Project) ஆகியனவற்றை உள்ளடக்கி கலைத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது

iv. தேசிய திறனூக்கக் கல்வி வரைவுமுறை (NEQF), தேசிய மதிப்புப் புள்ளி வரைவுமுறை (NCrF). தேசிய உயர்கல்வி கல்வித்தகுதி வரைவுமுறை (NHEQF) ஆகிய தேசிய வரைவு முறைகளோடு இசைவுபட திறனூக்க விருப்பப் பாடங்கள் (SEC) வடிவமைக்கப்பட்டுள்ளன

v. இந்திய மரபுசார் அறிவைப் (IKS) பிரதிபலிக்கும் வண்ணம் பாடத்திட்டங்கள் வடிமைக்கப்பட்டுள்ளன

vi. SWAYAM / SWAYAM Plus மூலம் இணைய வழியில் வழங்கப்படும் இணையப் பாடத்திட்டம் புதிய கலைத்திட்டத்தில் உறுதிபட இணைக்கப்பட்டுள்ளது

vii. பாடத்திட்டக் கற்றல் விளைவு (COs), பட்டப்படிப்புக் கற்றல் விளைவு (POs), பட்டப்படிப்புக் கற்றல் சிறப்பு விளைவு (PSOs) ஆகியவற்றிற்கு இடையிலான உத்தேச கணக்கீட்டு தொடர்புமுறை (Matrix Relationship) அனைத்துப் பாடத்திட்டங்களுக்கும் செய்யப்பட்டுள்ளன

viii. திறன் மேம்பாடு (Skill Development), வேலைவாய்ப்பு (Employability, தொழில்முனைவு (Entrepreneurship) ஆகியவற்றினை ஏற்படுத்தி தரும் வண்ணம் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன

ix. பாடத்திட்டங்கள் உள்ளூர், தேசிய, உலகளாவிய தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன

x. பாலின சமத்துவம், சுற்றுச்சூழல், மனித விழுமியம், தொழில்அறம் ஆகியனவற்றைப் பாடத்திட்டங்கள் வலியுறுத்துகின்றன

7. இரண்டு மதிப்புப் புள்ளிகளை 100 மதிப்பெண்களுடன் கூடிய SWAYAM / SWAYAM Plus மூலம் இணைய வழியில் வழங்கப்படும் இணையப் பாடத்திட்டம் ஒன்றினை நான்காம் பருவத்திலும் துறை மூலம் வழங்கப்படும் பட்டப்படிப்பிற்கு ஏதுவான ஒரு பாடத்தினை ஐந்தாம் பருவத்திலும் தன்முயற்சி கற்றலின் கீழ் இணைத்துக் கொள்ள குழுப் பரிந்துரை செய்கிறது

8. SWAYAM / SWAYAM Plus மூலம் இணைய வழியில் வழங்கப்படும் இணையப் பாடத்திட்டத்தினை நான்காம் பருவத்தில் தேர்ச்சி பெறாதவர்கள் துறையால் வழங்கப்படும் மாற்றுப் பாடத்தைக் கற்க வாய்ப்பளிக்க குழு ஒப்புதல் அளிக்கிறது. இவ்வாய்ப்பினை இறுதி பருவத்தில் மட்டுமே பயன்படுத்திக் கொள்ள இயலும்

9. பட்டப்படிப்பிற்குத் தொடர்புடைய மதிப்புக் கூட்டுப் பாடம் (Value Added Course) ஒன்றினை நான்காம் பகுதியில் (Part IV) இணைத்துக் கொள்ளக் குழு ஒப்புதல் அளிக்கிறது

10. தேர்வு மற்றும் மதிப்பீட்டில் பல்கலைக்கழக மானியக் குழு, தமிழ்நாடு மாநில உயர்கல்வி குழு ஆகியன செய்த மறுசீரமைவைப் புதிய கலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளக் குழு ஒப்புதல் அளிக்கிறது

தொடர் அகமதிப்பீடு (CIA) – 30 மதிப்பெண்
புறத்தேர்வு (ESE) – 70 மதிப்பெண்
கூடுதல் -- 100 மதிப்பெண்

11. கீழ்க்காணும் புதிய தொடர் அகமதிப்பீட்டு முறைக்கு ஒப்புதல் அளிக்கிறது

| பிரிவு | மதிப்பெண் |
|---|---|
| இடைப்பருவத் தேர்வு | 7.5 |
| மாதிரித்தேர்வு | 7.5 |
| ஒப்படைப்பு – 1 | 5.0 |
| ஒப்படைப்பு – 2 | 5.0 |
| வருகைப் பதிவு | 5.0 |
| கூடுதல் | 30.0 |

12. கீழ்க்காணும் வினாத்தாள் வடிவமைப்பை ஏற்று ஒப்புதல் அளிக்கிறது

| வ.எண் | பிரிவு | மதிப்பெண் | வகை |
|---|---|---|---|
| 1. | Part A | 10×1 = 10 | சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் - 5<br>கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்தல் - 5 |
| 2. | Part B | 5×2 = 10 | குறுவினா |
| 3. | Part C | 5×4 = 20 | இரண்டில் ஒன்று (இது அல்லது அது) |
| 4. | Part D | 10×3 = 30 | ஐந்தில் மூன்று (5 கூறிலும் வினா அமைதல்) |
| கூடுதல் | | 70 | |

13. கல்விஇடைப் பயிற்சியை நான்காம் பருவத் தொடர் விடுப்புக் காலங்களில் 15 முதல் 21 நாள்களுக்கு மேற்கொள்வதற்குக் குழுப் பரிந்துரை செய்கிறது

14. கல்விஇடைப் பயிற்சிக்கான தொடர் அகமதிப்பீட்டை ஐந்தாம் பருவ மதிப்பெண் பட்டியலில் இணைத்துக் கொள்வதற்கும் அதன் அறிக்கைக்கு 50 மதிப்பெண் வாய்மொழித் தேர்விற்கு 50 மதிப்பெண் என மொத்தம் 100 மதிப்பெண் வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கிறது

15. திட்டக்கட்டுரைக்கான மதிப்பீட்டு முறை கீழ்க்காணுமாறு பின்பற்றிக்கொள்ளக் குழு பரிந்துரை செய்கிறது

| வ.எண் | விவரம் | மதிப்பெண் |
|---|---|---|
| 1. | திட்டக்கட்டுரைக்கான முன்னெடுப்பு முறை | 10 |
| 2. | வடிவமைப்பு, வெளிப்பாட்டு முறைமை, புதிய உத்தி, புதிய அணுகுமுறை, தொழில்நுட்பப் பயன்பாடு | 40 |
| 3. | திட்டக்கட்டுரை அறிக்கை | 10 |
| 4. | வாய்மொழித் தேர்வு | 20 |
| | கூடுதல் | 100 |

16. உடல்நலமும் மனஆரோக்கியமும் என்ற பாடத்திட்டத்திற்குக் கீழ்க்காணும் மதிப்பீட்டு முறையைப் பின்பற்றிட குழு பரிந்துரை செய்கிறது

| பிரிவு | விவரம் | மதிப்பெண் |
|---|---|---|
| A | பயிற்சி குறித்த அறிக்கை | 40 |
| B | பயிற்சி காலத்திற்கான வருகைப்பதிவு | 20 |
| C | பயிற்சி காலத்தில் வெளிப்படுத்தும் செயல்பாடு | 40 |
| | கூடுதல் | 100 |

17. கட்டாய திறனூக்க பாடங்கள் பிரிவின் (AECC) கீழ் **பேரிடர் மேலாண்மை** பாடத்திட்டத்தை ஐந்தாம் பருவத்தில் இணைத்து நடத்திட குழு பரிந்துரை செய்கிறது

18. அனைத்து இளநிலை பட்டங்களிலும் விருப்ப மொழிப் பாடப்பிரிவில் பகுதி1 தமிழைத் தேர்வுச் செய்யாது பிற மொழிப் பாடங்களைத் தேர்வுச் செய்தவர்கள் முதல் இரண்டு பருவங்களில் கற்க வேண்டிய பிற துறை பாடங்கள் (IDC) இரண்டிற்கும் பதிலாக **பள்ளிப் படிப்பில் தமிழைப் படிக்காதவர்களாயின் அடிப்படைத் தமிழையும் (2தாள்கள்) பள்ளிப் படிப்பில் தமிழைப் படித்தவர்களாயின் சிறப்புத் தமிழையும் (2தாள்கள்) மட்டுமே** கற்கவேண்டும் என்ற ஒழுங்க அமைவுக்குக் குழு ஒப்புதல் அளிக்கிறது

19. முற்றிலும் புதிய உள்ளடக்கங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள பகுதி 1 தமிழ், மொழிக்கான பாடத்திட்டங்களை ஏற்றுக் குழு பரிந்துரை செய்கிறது

- **நவீன இலக்கியம், சிறுகதை, இலக்கணம், பொதுக்கட்டுரை**
- **பக்தி இலக்கியம், நாவல், இலக்கணம், மொழிபெயர்ப்பு**
- **காப்பிய இலக்கயம், நாடகம், இலக்கணம்,கடிதம் எழுதுதல்**
- **சங்க இலக்கியம், உரைநடை, இலக்கணம், பிழைதிருத்தம்**

20. அனைத்து இளநிலைகளுக்கான பகுதி - 1 ஹிந்தி மற்றும் உணவக மேலாண்மையியல் துறைக்கான உணவக விடுதி ஹந்தி ஆகிய மொழிப்பாடங்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களை ஏற்றுக் குழு ஒப்புதல் அளிக்கிறது

21. பகுதி – 1 தமிழ், ஹிந்தி ஆகிய மொழிகளைத் தவிர்த்து பிற மொழிப் பாடங்களைத் தேர்வுச்செய்யும் நிலையில் அதற்குப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டங்களைப் பின்பற்றிக் கொள்ள குழு பரிந்துரை செய்கிறது

22. முதன்மைப் பாடப்பிரிவிலுள்ள 15 பாடத்திட்டங்களில் கீழ்க்காணும் புதிய பாடத்திட்டங்களை ஏற்றுக் குழு பரிந்துரை செய்கிறது

- யாப்பருங்கலக் காரிகை
- தண்டியலங்காரம்
- அற இலக்கியம்
- காப்பிய இலக்கியம்
- நாட்டுப்புறவியல்

23. முந்தைய கலைத்திட்டத்தில் உள்ள கீழ்க்காணும் பாடத்திட்டங்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களை ஏற்று அதனைப் புதிய கலைத்திட்டத்தின் முதன்மைப் பாடப்பிரிவில் பின்பற்றிடக் குழு ஒப்புதல் அளிக்கிறது

- இக்கால இலக்கியம்
- சிற்றிலக்கியம
- பண்டைய இலக்கியம்
- சித்தர் இலக்கியம் சித்த மருத்துவம்
- புறப்பொருள் வெண்பா மாலை

24. கீழ்க்காணும் நான்கு பாடத்திட்டங்களையும் துணைமைப் பாடப்பிரிவின் (AC) கீழ் அமைத்துக் கொள்வதற்கும் அவற்றில் செய்துள்ள மாற்றங்களை ஏற்றுப் பின்பற்றி கொள்வதற்கும் குழு பரிந்துரை செய்கிறது

- தமிழ் இலக்கிய இலக்கண ஆளுமைகள்
- தமிழ் இலக்கண வரலாறு
- தமிழ் மொழி வரலாறு
- காலந்தோறும் பெண்ணியம்

25. கீழ்க்காணும் ஐந்து புதிய பாடத்திட்டங்களை ஏற்றும் அவற்றைத் துறைச்சிறப்பு விருப்பப் பாடப்பிரிவில் (DSE) இணைத்துக் கொள்ளவும் குழு பரிந்துரை செய்கிறது

- பயண இலக்கியம்
- சிறார் இலக்கியம்
- தன்வரலாற்று இலக்கியம்
- இலக்கியமும் உளவியலும்
- தமிழில் மரபுப் பெயர்கள்

26. **படைப்பிலக்கியம், மொழிபெயர்ப்பியல்** ஆகிய பாடத்திட்டங்களில் செய்துள்ள மாற்றங்களையும் **பதிப்பியல்** என்ற புதிய பாடத்திட்டத்தையும் ஏற்றுத் திறனூக்க விருப்பப் பாடப்பிரிவில் இணைத்துக்கொள்ள ஒப்புதல் வழங்குகிறது

27. **1.தமிழ்நாடு அரசுப் போட்டித் தேர்வுகள், 2.போட்டித் தேர்வுகளுக்குரிய இலக்கணம், 3.திருக்குறளில் மேலாண்மைச் சிந்தனைகள், 4.மருத்துவ முறைகளும் திருக்குறளில் மருத்துவச் சிந்தனைகளும், 5. சங்க இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்** ஆகிய ஐந்து புதிய

28. முதன்மைப் பாடம் (15), துறைச் சிறப்பு விருப்பப் பாடம் (9) திறனுக்க விருப்பப் பாடம் (9), பொதுமை விருப்பப் பாடம் (6) ஆகிய பாடப்பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களைத் தவிர்த்து மீதமுள்ள பாடத்திட்டங்களுக்கு முந்தைய கலைத்திட்டத்துள்ள பாடத்திட்டங்களை அப்படியே பின்பற்றிக்கொள்ள குழு ஒப்புதல் அளிக்கிறது

29. மதிப்புக் கல்வி (Value Education), பாலினச் சமத்துவக் கல்வி (Gender Studies) ஆகிய பாடத்திட்டங்களின் உள்ளடக்கங்களை முந்தைய கலைத்திட்டத்தில உள்ளபடி பின்பற்றிக்கொள்ள ஒப்புதல் அளிக்கப் படுகிறது

30. போட்டித் தேர்வுகளுக்குரிய தமிழ் இலக்கிய வரலாறு, போட்டித் தேர்வுகளுக்குரிய தமிழ் இலக்கணம் ஆகிய இரண்டு பொதுமை விருப்பப் பாடத்திட்டங்களையும் கொள்குறி வினா வடிவிலேயே (MCQ) குவிமுனை விடைத்தாள் (OMR) மூலம் தேர்வு நடத்திடக் குழு ஒப்புதல் அளிக்கிறது

31. ஐந்தாம் பருவத்தில் வைக்கப்பட்டுள்ள **பண்டைய இலக்கியம்** பாடத்திட்டத்தின் தேர்வினைத் திறந்தநிலைத் தேர்வாக நடத்திடக் குழு ஒப்புதல் அளிக்கிறது

| எண் | பெயர் | பொறுப்பு | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | முனைவர் கு.தயாநிதி<br>துறைத்தலைவர், தமிழ்த்துறை | தலைவர் | [signature] 29/4/2026 |
| 2. | முனைவர் இரா,ரவிச்சந்திரன்<br>இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை<br>தேசிய கல்லூரி, திருச்சிராப்பள்ளி | பல்கலைக்கழக உறுப்பினர் | [signature] Dr. R. RAVICHANDRAN<br>ASSOCIATE PROFESSOR<br>DEPARTMENT OF TAMIL<br>NATIONAL COLLEGE (Autonomous)<br>TIRUCHIRAPPALLI - 620 001. |
| 3. | முனைவர் S.ஸ்ரீதேவி<br>உதவிப் பேராசிரியர், ஹிந்திதுறை<br>தூய வளனார் கல்லூரி,திருச்சிராப்பள்ளி | பல்கலைக்கழக உறுப்பினர் | [signature] 29/4/26 |
| 4. | முனைவர் வீ.செல்வகுமார்<br>துறைத்தலைவர்<br>கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை<br>தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | பாட வல்லுநர் | |
| 5. | முனைவர் S.சந்திரா<br>துறைத்தலைவர். தமிழாய்வுத் துறை<br>ஸ்ரீமீனாட்சி அரசு கலைக் கல்லூரி (த)<br>மதுரை | | சு. சந்திரா 29/04/2026<br>முனைவர் சு. சந்திரா<br>இணைப்பேராசிரியர் & தலைவர்<br>முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை<br>ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர்<br>கலைக் கல்லூரி (இ), மதுரை-625002 |

| | | | |
|---|---|---|---|
| **6.** | முனைவர் கி.கோவிந்தன் | துறை உறுப்பினர் தமிழ் | |
| **7.** | முனைவர் இரா.லதா | | 29/04/26 |
| **8.** | முனைவர் பா.கவிதா | | 29/4/26 |
| **9.** | முனைவர் தெ.வேல்பாண்டிச் செல்வி | | |
| **10.** | திருமதி லெ.அஞ்சலை | | 29/4/26 |
| **11.** | திரு.S.ரெங்கசாமி | துறை உறுப்பினர் ஹிந்தி | |
| **12.** | கவிஞர் மு.கீதா<br>வீதி கலை இலக்கியக் களம்<br>புதுக்கோட்டை | படைப்பாளர் | 29/4/26 |
| **13.** | செல்வி C.ஜீவஜோதி<br>புதுக்கோட்டை | முன்னாள் மாணவி | |